ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமத்
இராமாயண சரித்திரக்
கும்மி.

இஃது,

கண்ணனூர்

பத்மாலைனி அம்மாளால்

இயற்றப்பட்டு,

ஜீவகாருண்ய விலாச அச்சுக்கூடத் தலைவர்

கோ. செல்லப்ப முதலியார்

அவர்களால்,

டைட்டில் பேஜ் மாத்திரம்

அமிர்த குணபோதினி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை.

இதன் விலை] 1929 [அணா 12.

எங்களிடத்தில் ஊருசிகரமான தமிழ் நாவல்களும், கதைப் புத்தகங்களும் 60 நாளில் தமிழ் எழுத்தை வாசித்தால் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக்கூடிய "ஆங்கில ஆசான்" என்னும் புத்தகமும் கிடைக்கும். தேவையுள்ளவர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆங்கில ஆசான் 60-நாளில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக்கூடிய புஸ்தகம் விலை ரூ. 2.

இதே புஸ்தகம் தெலுங்கிலும் கிடைக்கும் ரூ. 2.

		ரூ.	அ.
அங்கயற்கண்ணி அல்லது அன்புள்ள மங்கை	...	1	12
திருக்கழுக்குன்றத்துக் கொலை-துப்பறியும் நாவல்	...	1	8
இராமநாதன் அல்லது கோலார் கொலைக்கள்ளன் முதல் பாகம்	...	1	8
,, இரண்டாம் பாகம்	...	1	4
அம்பலவாணன் அல்லது கற்பகவனத்தில் நடந்த கடுங்கொலை	...	1	4
அமிர்தகுமாரி அல்லது செஞ்சிப் புதையல்	...	1	4
ஆயிரம் தலைவாங்கிய அதிசய சிந்தாமணி	...	1	0
மாணிக்கவல்லி அல்லது ஓர் மாதின் மர்மம்	...	1	0
சுந்தரவதனி அல்லது தர்மமே ஜெயமளிக்கும்	...	0	12
எமகாதகன் அல்லது மாயாசித்தன்	...	[illegible]	[illegible]
அண்டப் புளுகன் அல்லது ஆகாயப்புளுகன்	...	[illegible]	[illegible]
பதினெட்டாம் பாஷை என்னும் அபூர்வ துப்பறியும் இரகசிய பரிபாஷை	...	0	8
நவீன நவரத்தின இலாவணி	...	0	8
கண்ணைக்கட்டிக் காலங்கழிக்கும் மிஸ்டர் திண்ணைத்தூங்கி தடிராமன்		0	6
நவீன நவரத்ன ஒப்பாரி	...	0	5
காதலற்ற கலியாணம் அல்லது பெண்வீட்டாரைக் கொள்ளையடித்தல்		0	2
மாமிகளின் துயரம் அல்லது மருமக்களின் கொண்டாட்டம்	...	2	0
தங்கசாலைத் தெரு ஒரு தாசியின் ரகசியம்	...	0	1

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலைத் தெரு, சென்னை.

TAMIL VIRTUAL ACADEMY

ஸ்ரீ

இராமாயணக்கும்மி.

விருத்தம்.

புல்லைமாநகரில்வாழும் பொற்கொடிநாதாயெந்தன்
தொல்லைகள்தீரவே ஸ்ரீராமனுடசரித்திரத்தை
நல்லதோர்கும்மியாய்பாட நாட்டிலுள்ளோர்கொண்டாட
வள்ளலேவந்துஎன்முன் வரமருள்செய்வாய்நீயே.

1-வது கட்டம்.

தாகமெடுத்து.

1. ஆதிகுருவானவேதாந்ததேசிகர்
ஆனந்தப்பாதத்தை நான்பணிய
ஜோதிபுகழும் ஸ்ரீராமாயணக்கும்மி
செப்பிடவேயருள்செய்திடுவீர்.

வேறு.

2. நீதிபுகழ்கலைவாணியரேதாயே
நீலவர்ணன் லீலைதன்னைக்கும்மியாக
பிரீதியுடனேனுக்கிரகிப்பாய்நீயே
புல்லைநகர்வாழ்பத்மாஸனித்தாயே.

வேறு.

3, ஆதியில்பாற்கடலில்
ஆனந்தசயனந்தன்னில்
அன்புடன்பள்ளிகொண்டார்
துன்பத்தால்தேவர்விண்டார்.

வேறு.

4. பூவுலகுதேவரெல்லாம்
புண்ணடைந்துதசகண்டனல்
ஜெகதாமாயென்னைக்காருமென்று
திருவடியில்பணிந்துநின்றார்
கடைக்கண்ணாலே என்னைப்பாரும்
எங்கள்கவலைதன்னை தீருமெனறார்.

வேறு.

5. முப்பத்துமுக்கோடி தேவர்களெல்லாம்
முறையிட்டுக்கரங்குவித்துநிற்க
அற்புதமான ஜெகநாதன்
யோகநித்திரைவிட்டு எழுந்திருந்தார்,

வேறு.

6. அஞ்சாதே தேவர்களா
வஞ்சக அரக்கர்களை
அஞ்சிடச்செய்வோமென்றார் ஜெகநாதனெனும்
கஞ்சமலர்க்கண்ணனும்.

வேறு.

7. ஈசனயன்தேவரோடு
இந்திரன் எமன்முதலாய்
வாஸம்செய்திடகிஷ்கிந்தியில்
மகபலத்தோட்வானரசாய்
அவதரித்துஆண்டிருப்பீர்
ஆதிகுபேரன்வாலியாக.

வேறு,

8. மானிடவானரல்லாமல்
மகாதேவர்வரம் வெல்லப்போகாது
ஆனதினாலே கிஷ்கிந்தியாபுரிதன்னில்
ஆண்டிருப்பீர்வெகுசேனையுடன்.

9. பார்முழுதாளுகின்ற
பக்தியுள்ளதெசரதற்கு
ஸ்ரீராமராகவந்து தம்பியோடு
ஜெனிப்போமென்றாக்யாபித்தார்.

வேறு.

10. பூர்வபுண்யவசமடைந்த
பொற்கொடிகௌஸலைக்கி
சீருடையபாலகராய்
ஜெனித்திடவேசெல்வோமென்றார்
சங்குசக்ரசேஷர் தம்மோடு
தம்பிமாருப் உதிப்போமென்றார்.

வேறு.

11. ஆண்டவர்செப்பியவாக்கமுறை தேவர்
அன்புடன் சிரசுமேல்வகித்து
பூண்டுமேவானராபூபதியாகிய
பூலோகந்தன்னில் அரசாண்டார்.

வேறு.

12. நாரதர்தானறிந்து
நல்லகாலம்வந்ததென்று
சாரந்தனைவுரைக்க வால்மீகரும்
சந்தோஷங்கொண்டவரும்.

வேறு.

13. இருபத்திநாலாயிரம்சுலோகமாக
ராமாயணசரித்திரத்தை
பார்முழுதய்விளங்கவைத்தார்
பாகவதால் கெதிபெறவே
அயோத்தியாளும்தசரதரும்
கீர்த்திபெறவாழ்ந்திருந்தார்.

௨-வது கட்டம்.

இராகம்-கல்யாணி ஆதிமூலமே.

1. அயோத்தியாபுரிபட்டணம்
அருபதனாயிரசம்வஸ்ஸரம்
வையமுழுதொருகுடைகீழாகவே
மகருஜர் ஆண்டிருந்தார்.

2. பூனைக்கிளிபோர்கூண்டில் விளையாடும்
புலிபசுவொருதுறைநீருண்ணும்
தினசரண்யன்சக்ராக்கினையின்படி
செங்கோல்நடத்திவந்தார்.

3. பிர்மக்ஷத்திரியன்வைசியன்சூத்திரன்
புவனத்திலுள்ளோர்கள்
தர்மநிலைப்படித்தவராமல் அந்த
தரணியிலாண்டிருந்தார்.

4. வம்புசெய்ய அந்தசம்பராசூரனை
வானத்திலேத்திவைத்தா
ஐம்பத்தாறுதேசத்திராஜர் கப்பங்கட்ட
ஆண்டார ராஜ்ஜியத்தை.

5. ஆண்டவரைத்திரிகாலமும் பக்தியாய்
ஆராதிப்பவராம்
வேண்டுமுனிவர்கள் விப்ரர்அபீஷ்டத்தை
விரும்பியேநடத்துவராம்.

6. கோசலைசுமத்திரை கைகேசியென்
கோதையர்மூன்றுபட்டத்தேவியராம்
வாஸமுடன் அறுபதாயிரம் ஸ்திரீயுடன்
மகாராஜர் ஆண்டிருந்தார்.

7. யாகஹோமகர்மாதி எக்யங்கள்
அந்தணர்செய்திடவே
வேதசாலை அன்னசத்திரம் ஆலயம்
விரும்பியே நடத்துவாராம்.

௩-வது கட்டம்.

இராகம்-வந்தகோபிமாரோடு.

மந்திரிசுமிந்திரரோடுரைத்தார் மகராஜன் தசரதனும்.

அநுபல்லவி.

2. இத்தனையுங்கிடைத்தும் புத்திரனில்லாமையால்
சித்தம்வருந்திராஜன் மெத்தத்துயரத்தோடு (மந்)

3. அருபதினாயிரம் வருடமட்டும் ஆண்டு
பெருமையடைவதற்குச் சிறியவனில்லையே. (மந்)

4. இந்தவிதம்புலம்பும் வேந்தரைப்பார்த்துமந்திரி
அந்தரங்ககுருவை இந்தக்ஷணம் அழைத்து
வாரேனென்றாரே சுமந்திரர்
மகராஜனண்டையில் வாரேனென்றாரேசுமந்திரன் (மந்)

5. மகமுனிவசிஷ்டரும் மானுபாவர்களைக்கேட்டு
ரிஷிகள்முதலாகிய
தேவர்களெல்லாம்வந்தார் தெசரதரண்டையில்
ஆனந்தங்கொண்டு (மந்)

6. வந்தனம்தந்ததொரு வேந்தரைக்கண்டுமுனி
இந்தத்துயர்வுமந்த வந்தகாரணமென்னென்று
ஆதிகுருவசிஷ்டரருள்
அரசனண்டையிலே (மந்)

7. புத்திரனில்லாதோர்க்கு முக்திகிடைக்காதென்று
உத்தமவாக்கியத்தால் சித்தம்தெரிந்துகொண்டேன்
பிள்ளையில்லாத பாக்கியம்நான்
பெற்றிருந்துமென்னயோக்கியம் (மந்)

8. பக்தியாயநதியோரத்தில் புத்திரகாமேஷ்டியாகம்
சற்றுதாமசமன்னியில் சேகரிப்பீர்சாமகிரி
யாகசாலைபநேமித்தார்
அரசன்பத்தினிகையில் கங்கணம்தனைதரித்தார் (மந்)

9. யாகசாலையில்மகா ஹோமங்கள்செய்ய திவ்ய
நேமபுருஷன்வந்து பாயாசம்தன்னைக்கொண்டு
தந்தார்தசரதரண்டையில் ஆனந்தம்கொண்டு
வந்தார் அரண்மனையில்சென்று (மந்)

4-வது சட்டம்.

1. வாங்கியேபிரசாதம்தன்னைவந்து அரண்மனைக்குள்ளே
பாங்கியாகஸ்லைக்குப் பகுத்துஒருபாகந்தன்னையே
அளித்தாரடிபக்குவமாய் ராஜன்பிள்ளையே.

2 மத்துமொருபாகந்தன்னை உத்தமிகைகிசுமத்திரை
மெத்தவுமகிழ்ச்சியோடு பத்தினிக்களித்தார்ராஜனும்
வாங்கிப்புசிக்க உத்தமர்ஜெனித்தாரப்போது.

3. மாசம்ஒன்றிரண்டுமூன்று மசக்கையும்தெளிந்தபின்பு
தேசமுழுதாளும்ராஜர் ஸ்ரீமந்தக்கல்யாணம்செய்தாரே
திங்கள்பத்துமாசமும் செல்லப்பிறந்தாரே.

4. சித்திரைநவமிகடகம் செழும்புனர்பூசகிரகமஞ்சும்
உச்சத்தில்செல்ல ஸ்ரீராமாஉகந்துமே அவதரித்தாரே
கௌசலையம்மாள் மகிழ்ந்துமேபுளகித்தாளே.

5. மங்கையர்கள்மூவருக்கும் மைந்தனுதித்தது நன்று
அங்கம்பூரித்துரசன் கங்காநதிவந்தடைந்தாரே
கோடிதானங்கள் அந்தணர்க்குசெய்திருந்தாரே.

6. பத்துநாளும்சென்றபின்பு உத்தமவசிஷ்டமுனி
நேர்த்தியாய்புண்யாசனத்தை கீர்த்தியாய்செய்துநவரெத்ன
தொட்டில்தன்னில் பிரீதியாய்க்
கண்வளர்ந்தாரேகண்ணன்.

7. ராமன்பரதன்லெட்சுமணன் சத்ருக்கனென்னுமுனி
நாமகரணம்ஜாதகர்மம் நன்மையுடன்சாதித்தானப்போ
ராஜன்கண்டுகொண்டுசெய்த தபலமாச்சிப்போ.

5-வது கட்டம்.

1. மங்கிலியஸ்திரீகளெல்லாம் மங்களங்கள்பாட
மாதவனைவாழியென்று அக்ஷதைகள்போட.

2. வந்துவடிவாய்வளர்ந்த வரிசையுள்ளகுழலும்
சந்திரன்போன்றநெத்தியில் தரித்தநாமத்தொளியும்

3. சிங்காணிவில்லுப்போன்ற தெளிந்தபுருவத்தழகும்
தங்கமெடல்போலசெவியில மகரகுண்டலம்துலங்க.

4. புண்டரீககண்ணழகும் பூர்ணச்சந்திரமுகமும்
கண்டுகளிக்கும்கண்ணாடி பால்போலத்தோடொளியும்

5. பச்சைநிறமேனிகளும் பவழம்போன்றஉதடும்
அச்சுதர்குருநகையும் ஆணிமுத்துப்பல்லும்.

6. சங்குச்சக்கரம்தரித்தகையும் சதுர்புஜத்தினழகும்
மங்கைதுளசிவசிக்கும்மார்பில்மருவுனுடைய அழகும்.

6-வது கட்டம்.

1. ஆலிலைபோல்வபரழகும் அமர்ந்தமுப்புரிநூலும்
   கோலமுள்ளகொடியிடையும் குலுங்கும்சலங்கையொளியும்

2. மந்தகஜம்போல்திரண்ட உத்தமாதுடையும்
   முத்துச்சிப்பிப்போன்றதொரு முழங்காலினோடழகும்.

3. அண்டசராசரமுழுதும் அளந்தபாதந்தன்னில்
   தண்டைசிலம்புகொலுசு சலசலவென்றணிந்தார்.

4. தத்தடியும்தளர்நடையும் தவிழ்ந்துவிளையாட
   தாய்மார்கள்மூவரும் பரவசங்கொண்டாட.

5. சவளஉபநயனம் சாஸ்திரத்தால்செய்ய
   புவனமெங்கும்புகழும் பூர்ணமானவித்தைகற்றார்.

6. சேவைகண்டுராஜனப்போ சிந்தைமகிழ்ந்திருக்க
   தசரதன்னைவிலக்க விஸ்வாமித்திரர் அங்கேசிரக்க.

7. யாகம்நிறைவேற்றிவைக்க தாடகியைவதைக்க
   ராகவனைஅனுப்புமென்று கௌசிகருரைக்க.

8. பால்மறைவாபாலகனே அந்தப்பாதகியைக்கொல்ல
   நீதியுண்டோநான்வருவேன் நிமிஷந்தன்னில்வெல்ல.

9. வசிஷ்டரொடுகௌசிகரும் மத்துமுள்ளமுனியும்
   ஜெகபதியைஅனுப்புமிப்போ ஜெயகாலந்தானென்றார்.

10. மாதவரும்தம்பியரும் மகமுனியின்பின்செல்ல
    ஆதரவாய்நதிகளோடு ஆரண்யந்தாண்டி.

11. யாகநிறைவேத்தவென்று ஆயுதங்கைகொண்டு
    ஏகாஸனத்திலிருக்க எதிர்த்துவந்தாள் அரக்கி.

7-வது கட்டம்.

1. கண்டான் தாடகிதன்னை ராகவன்
   கைகொண்டான் கோதண்டமுன்னே. (கண்)

அநுபல்லவி.

2. கண்டான் தாடகிதன்னை
கொண்டான் கோதண்ட முன்னே
அண்டசராசரத்தையுண்ட ஜெகதீசன். (கண்)

3 வண்டன்சுபாகுதனனை துண்டம்செய்துமாரீசனை
சண்டமாருதம்போலே சப்தசாகரம்தாண்டிவிழ. (கண்)

4. ஆகாசந்தன்னில்ரெத்த மாம்ஸம்வருஷித்து
சாகாசம்செய்தஅநத மோசக்காரியானே. (கண்)

3. கொல்லைமலைபோலே பொல்லா அரக்கிவுத
தொல்லுலகோர்புகழ் வள்ளல்ஜெகனாதன். (கண்)

6. முப்பத்துமுக்கோடி தேவர்கலர்சொரிய
அற்புதமானதிரள் அஸ்திரங்கையில்தரித்து. (கண்)

8-வது கட்டம்.

1. தேவரெல்லாம்புஷ்பமாரிசொரிந்திட
ஸ்ரீராமர் தம்பிமுனியோடு
பாவனையாகவேசென்றிடவே சுவாமி
பாததூளியதுசிந்திடவே.

2. கல்லுருமாரியேபெண்ணுயெழுந்து
கமலப்பாதயபணிந்திடவே
வள்ளலென்னும்ராமர் மாமுனியைநோக்கி
வந்தவளாரென்றுதாமுரைக்க.

3. ஆதியில்இந்திரன்கௌதுமருக்கு
சம்வாதம்மிக அப்போவுந்ததினால்
பாதகமான கிருத்தியந்தன்னைச்செய்திட
இச்சாபவிறமாசனம் ஆச்சிதென்றார்.

5. தம்பியும்தானும் தவமுனியும்
தானடந்து அந்தக்கானகத்தே
அன்புடனேமிதிலாபுரிபட்டணம்
ஆனந்தமாகவே செல்லலுற்றார்.

5. உப்பரிகை மீதில் தோழியுடன்கூட (சீதை)
உலாவிநோதைகமயிராத்திநிற்க
மைப்பொருள்வண்ணன் மைதிலியைக்கண்டு
மையலாக அவர் ஏதுசொல்வர்.

6. பூமடர்மங்கைவளரமாதோ இவள்
பொன்மணியோ ஈசன் கண்மணியோ
காமனுடரதிதேவியரோ இவள்
கானகத்துவளர் மான்மயிலோ.

9-வது கட்டம்.

1. சுவாமிஇவள்ஜெனகன் நேமிதமாகிவந்த
பூமிதன்னிலுதித்த (சீதா)
தேவியிவள்என்றறிவீர்.

2. மன்னன்சபைதன்னிலே கண்ணபிரான்செல்ல
உன்னிதபூஜைசெய்து ஜெனகன்
உகந்து ஆஸனமிட்டார்.

3. சாமளவர்ண இனிதாமஸம் ஏதோவென்று
கோமான் கௌசிகருரைத்திட
ஜெகதாமன்எழுந்தருள.

4. மேருபோன்றதோர்வில்லை கூறுமுரித்தவர்க்கு
தாரைவார்ப்பேனென்றார்ஜெனகன்
சபதம்தன்னைச்செய்தாராம்.

5. அண்டகடாகமெல்லாம் நின்றுநடுங்கிடவே
புண்டரீகன்கரத்தால் தனுவொடிந்து
கண்டோர்பிரமிக்கவிழ.

10-வது கட்டம்.

1. மன்னுகிமன்னர்பிரமிக்க மந்திரிமுதலானோர்திகைக்க
உன்னிதமானவடிவைக்கண்டு மன்னன்ஜெனகன்மகிழ்ந்து

2. தங்கப்பல்லக்குமீதினில் மங்கைஜானகியம்மனே
சிங்காரம்செய்து அழைத்து சீக்கிரமாய்வாருமென்ன.

3. தாதியருரைக்கவுமே ஜெனகன்மாதாவும்மனமகிழ்ந்து
ஜோதியோடுபூஷணங்கள் சுந்தரிக்கலங்கரிக்க.

4. அன்னையரடி பணிந்து பன்னகசயனரை நினைந்து
மன்னன்சபை தனில்வந்து மகானுபாவர்கைப்பிடித்தாள்.

5. பச்சைநிரமேனியா அச்சுதரைகைப்பிடித்து
மெச்சியேதேவர் துதிக்க விளங்கும்சிம்மாசனம் அமர்ந்தர்.

6. தூதுவர்கள் அனுப்பிவைக்க சேதிதன்னையறிந்துபுத்திரர்
தேவியரோடு தசரதனும்ஜெனகன் மிதுலைவர.

7. மன்னன்ஜெனகன்கண்டு மங்கையர்நால்பேர்தன்னை
கன்னிகாதானங்கள்செய்தார் கார்வண்ணன்சகோதிரர்க்கு.

8. வசிஷ்டருடுகௌகரும் மாயவரும்வேதமோத
ஜெகபதியோடுதம்பியர்க்கு திருமங்கல்யம்தரித்தார்.

9. உத்தமிப்பெண்களெல்லாம் முக்தனுலாலாத்தியிட
பத்தினித்தாய்மூவர்களும் உத்தமர்சேவைகொண்டாட.

11-வது கட்டம்.

1. தேவரெல்லாம்மலர்சொரிய ஜெயஜெயவென்றுசிபுரிய
பாவனையாரெதமேரீயே பத்தினிதம்பிமாருடனே.

2. ஜெனகரும்தெசரதரும் தேசமுள்ளமன்னவரும்
மனமகிழ்ந்துபவனிவர மங்கையர்கள் ஏதுசொல்வர்.

3. மன்மதனோசுந்திரனோ மனுஷவடிவாகிவந்தார்
என்னதவம்செய்தாள்சீதை இவரைமணம்புரியுதர்க்கு.

4. மாதரெல்லாம்மதிகலங்க மன்னன்வீதிபவனிவர
ஆதரவாய்சீதனங்கள் அரசன்ஜெனகனனுப்ப.

5. ஆனைபரிசேனையோடு அயோத்திநகர்செல்லவென்று
வேணவிருதுகள்சூழவே வேந்தரெல்லாம்அடிதாழ.

6. பாளயங்கள்வழிநடக்கப் பரசுராமன்வழிமரிக்க
கிலேசத்தால்ராஜன்திகைக்க கார்வண்ணன்மனங்களிக்க.

12-வது கட்டம்.

1. கண்டான்பரசுராமனே அகம்பாவத்தேக்கொண்டே
எதிர்நின்றான்முனே.

அநுபல்லவி.

2. மண்டத்தையாளும் மகாநுபாவவுமக்கு
தந்தேன் ஆசிர்வாதத்தை தாசரதேளன்று. (கண்)

3. வாரும்பரசுராமனே உமக்கு நமஸ்காரம்பரசுராமமே
மேருபோன்றதோர்வில்லை தாராளமாயெடுத்து
நேராகவந்துநின்ற காரணத்தையுரைப்பீர். (கண்)

4. பெண்ணைப்பிரநதவளே என்றெண்ணுமல்
தாடகியைகொண்ணபழிகார உனகென்னதரமோடா
ஆருரைத்தான்சொல்லடா சொல்லாவிட்டால்
என்னேராகவந்துநில்லடா. (கண்)

5. மெத்தமனந்துணிந்து பெத்ததாயைவதைத்து
சற்றுமலஜ்ஜையில்லாமல் (கண்)
இத்தனைகெர்வங்கொண்டிங்கேவந்ததேதடா
மதங்கொண்டுபொங்கிவந்தவன் ஆரடா (கண்)

6. பெத்தபிதாவோடுஉத்திரவின்படிக்கி அத்திசெய்ததினுல்
குத்தமுண்டோடாஉந்தன் வாயைத்திறந்துசொல்லடா
அட்டாதுஷ்டப்பேபயே எதிரில்நில்லடா. (கண்)

7. ஆசான்மொழிப்படிக்கி வீசினேன்தாடகியை
மோசமுண்டோடா இனிபேசடாதடா அடாமூடா
வேதியனென்றுபொறுத்தேன்இனி
என்னலாகாதென்று மறுத்தேன். (கண்)

8. சீதைசொத்தைவில்முரித்ததால் இத்தனைகெர்வமுனக்கு
மெத்தவந்ததடாக்ஷத்ரீகவம்சத்தைவேரறுத்தோனுடா
கார்த்தியசூரன்தன்னை கூருசெய்தவன்நானடா. (கண்)

9. நீட்டாய்உனதுபலம்காட்டாய் என்னுடன்சண்டைமூட்டா
இதிஎன்னத்தோடுகூட்டா அடா இதிஎன்னசெய்துவாய்
உன்பலத்தைஎன்னோடெ காட்டுவாய் துருஸா. (கண்)

10. உந்தன்பகிமைதன்னை சிந்தையில்நினைக்காமல்
வந்தேன்கெர்வங்கொண்டிறுந்தேன் பலங்களெல்லாம்
மாதவாயினியென்செய்வேன் உன்னையன்றி
வேறேகெதியுண்டோசொல்லுவாய். (கண்)

11\. வேதியரையனுப்பி சீதையருடன் கூட
பிரீதியுடனே அயோத்தியாபுரி
பட்டணந்தன்னிலேவந்தார் ஸ்ரீராமச்சந்திரனும்
தசரதர்க்குதந்தார் சேவைதன்னையே. (கண்)

13-வது கட்டம்.

ஈசேளபிங்களாநடுவில்.

1\. கோமான்தசரதனும் கோதண்டபாணிதனைநோக்கி
சுவாமிஎனக்கோர்மனுவை தந்திடவேண்டுகிறேன்.

2\. வாழையடிவாழையாகி வந்துதித்தபூரணனே
சூழுமிந்தராஜியத்தை துரைத்தனங்கள்செய்திடுவீர்,

3\. கட்டணம்யலங்கரிக்க பறைசாற்றுரைக்க
திட்டமுடன்மந்திரிமார் திருமுகங்கள்தானனுப்ப,

4\. ஐம்பத்தாறுதேசமுள்ள அயச்சர்மனம்பூரித்திட
எம்பெருமான்சேவைகாண யேமகந்தகாசமாய்வரவே.

5\. மகமுனியும்வசிஷ்டரோடு மறையவர்கள்கூடிடவே
ஜெகபதிக்குமுடிசூட்ட சிம்மாசனமலங்கரிக்க.

6\. நாளைமுடிசூடவென்று வீதியில்பேரிகையடிக்க
நீவியென்னும்கூனிசெவி கேட்டுமதிகோபமுடன்.

7\. வந்தாளேகைகேசியண்டை சஞ்சத்தில்பள்ளிகொள்ள
கண்டாளேகண்சிவந்து காகுல்தருக்குமுடிநாளைஎன்றான்.

8\. என்றவுடன்கைகேசியும் எழுந்திருந்துமுத்துமாலைதனை
தந்தாளேகூனியண்டை என்தலைமகனுக்குசூட்டென்று.

9\. கண்டாளேகூனிமுத்துசரகண்சிவந்துபொரிபரக்க
உண்டோடிஉன்போல் உலகுதன்னிலபேதையர்கள்.

10\. பாதகியேகௌசலை கைப்படிவாங்கிநீயுண்ணிலதக்கி
காலமிப்போவந்ததென்று கலங்குதடியென்கிளியே.

11\. ஆதியில்ராஜனுனக்கு அனுக்கிரகித்தவரம்ரெண்டேன்
ராமன்வனம்போகுதைக்கி பரதன்ராஜ்யமாளுதைக்கி

12\. கேளாயோவரமிரண்டேன் கிளிமொழியேஎன்றுரைக்கி
ஆளலாம்பரதனோடு ஆருண்டுஉனக்குமீடு.

14-வது கட்டம்.

நின்றதொருபாலகனே.

1. கூனியவள்சொல்லுமே கைகேசிகோபங்கொண்டுமனந்தளர்ந்து
பூமியில்புரண்டழுது பூஷணந்தன்னை வாங்கியடுங்கோலமானாள்.

2. ராமன்முடிதரிக்குஞ்சேதிதன்நாயகியோடுசொல்லவென்று
தாமஸங்கள் அன்னியிலே தசரதனும்தானடந்தார் அந்தப்புரம்.

3. மான்மொழியேகண்மணியே எந்தனோடேமதவியே உந்தனுக்கு
ஏன்கவலைவந்ததடியென்கண்மணியே எந்தனோடு உரையுமெனா.

4. எந்தனோடுரையுரையுமென்றீர் என்னுதா அந்தரங்கவஞ்சகமாய்
மூத்தமந்தனமுடிதரித்து எந்தன்பாலனைமுஷ்டிளடுக்கவந்தீர்.

5. ஏதடிகைகேசியரே உனக்கிந்தகுதுரைத்தபாதகியார்
மாயன்முடிதரித்தால் பரதன்மகிமைபெரவொண்ணாதடி

6. அன்னெனக்குதந்தவரம் பதினாலுஅளவேணும் ராமன்வனம்
பினனொருவரம்பரதன்ராசியத்தைபொருந்தியரசாளவேணும்

7. ராமன்வனம்போகவென்றுப்பாதகிநடுக்கமில்லாமல்சொன்னாய்
உன்பாலன்முடிசூட்டிதைக்கி நாள்பாராய் என்பகவான்வனம் போகவேண்டாம்.

8. சத்யமேயில்லையென்று என்னுதாஉத்திரவுதந்துவிடும்
சித்தநொடிக்குள்ளாக உன்சன்னதியில் ஸ்ரீ அத்திசெய்து கொள்வேனென்றாள்.

9. இந்தமொழிதனைகேட்டு தசரதர் எங்கியவர்மூர்க்கைபானார்
அண்டையிலநின்றதூதர்களை அறிராமா அழையுமென்றார்

15-வது கட்டம்.

மாதவரொடுதிருவடியை.

1. சீதையரோடு அந்தப்புறத்தில் ஸ்ரீராமர்வீத்திருந்தார்
சீக்கிரமாய்தூதுவர்கள் வாறுமென்று அழைத்தார்

அநுபல்லவி.

2. மாதாகைகேசியுப்போ வரவழைக்கவேணுமென்று
ஆதரவாய்எங்கள்தன்னை அனுப்பிவைத்தார்இங்குவந்தோம்

3. உங்களய்யர்தசரதரிப்போ அதிசோகத்துடன்கூட
அரிவைமரந்துமூர்ச்சையாகிவிழுந்திருக்குரார்பாரும்வயமள
தமாதவாவும்மை வரவழைக்கவேணுமென்று
கைகேசியம்மாளனுப்பினுள் கடுகவேஇங்குவந்தோம்

4. மாதவரரிந்துமகத்தானந்தங்கொண்டு நாம்வந்தகாரியம்
செயமாச்சுதென்றுமகிழ்ந்துசென்றுஸிதையரும்தாமுமாகி
சிக்கிரமாய்தானெழுந்து மாதாகைகேசியரண்
மனைக்குள்வந்துதான்வசித்தார்

5. அன்னையோடு அடிபணிந்து அவிருமச்சந்திரனும்
அழைத்துவரச்சொன்னதென்னஉரைப்பீர் அம்மாநீரும்
மன்னவரும்மூர்ச்சையாகி வந்தடைந்தகாரணமேன
என்னோடே உரைப்பீரம்மா ஏகாந்தமாய்நீருமென்று

6. என்னப்பனேபதினலாண்டு ஆரணயம்சென்றால்
உங்களய்யாஎழுந்திருப்பாரிப்போ அரைநிமிஷமேஎன்றாள்
இப்புவியைபரதனரசாண்டிருப்பார் எனகண்மணியே
ஏத்தமுள்ளசீதையோடு ஏகிடுவீர்மரைதரித்து

16-வது கட்டம்.

பாரளந்தார்திருவடியே.

1. அன்னையரேவனம்போல அனுக்கிரகந்தான்செய்தீர்
நான்என்னதவம்செய்தேனே ஏந்திழையேமுன்னாள்

2. பாலன்பரதராஜனிந்த பார்முழுதென் ஆள
கோலமுடன் அனுக்கிரகித்தீர் கோதையரிவ்வேளை

3. கொம்புப்பயிரைக்கூரையிலேத்திவிடும்போலே
அன்புடன்பரதன்தன்னை ஆதரிப்பாய்நீயே

4. அய்யருட அருகில்வந்து அவிராமச்சந்திரரும்
மெய்மரதிகொண்டதென்ன என்வேந்தரேஉரைப்பர்

5. எத்தபியேடுவனம்நடக்க உரைத்தாளேஎன்தாயே
சித்தைக்கடைக்கண்பார்த்து வருடனுரைப்பீர்

6. கண்விழித்துபார்த்துயென்னை கவலைதன்னைதீர்த்து
இல்லைமையமாகுபரதன்னை வாண்மைசூயுடன்சாரும்

7. ஆரண்யம்சென்றீரானால் உங்களையாரெழுந்திருப்பார்
தாரேனய்யாமரவுரியை தரிப்பீரப்பாநீரும்

8. மாதாகைகேசிதந்த மரவுரியைவாங்கி
ஆதரவாஆண்டவனும் அணிந்துகொண்டாரப்போ

17-வது கட்டம்.

ஆகிஜெகநாதா.

1. கண்டு ஆதிசேஷனும்கொண்டு அதிகோபமாய்
அளுடமளந்தோர்பாதம்மணிந்து
அதிசோபமாய் ஏதுரைப்பார்

2. என்னுடையநாதா எனக்கோர்வரம்தாதா
இந்தமன்னவரேன் தேவியரேன்கட்டி
பொல்லாச்சிரைவைத்திடுவேன்

3. இந்தவசிஷ்டரைப்போல் எந்தவுலகிலுண்டு
அந்தரங்கத்துடன் பரதருக்கு
அரசுமுடிசூட்டுமென்றார்

4. அண்டம்பதினாலும் அரசர்எதிர்த்தாலும்
துண்டமாய்விழவடிப்பேன் உமக்கே
ஜோதிமுடிசூட்டிவைப்பேன்

5. என்தம்பியிங்கேவாராய் ஏனமொழியைக்கேளாய்
வம்புசெய்யக்கூடாதடா குழந்தாய்
வாஞ்சையுள்ளகண்மணியே

6. நாட்டைபரதன்கொண்டால்நமக்கினிவருதோ
கோட்டைக்குள்படைவெட்டிப்போல் அடாதம்பி
கோபம்செய்யாதடா வெம்பி

7. தந்தைதாய்வாக்கியம் தான்கொண்டுபோக்யமாய்
சிந்தையில்மகிழ்ந்திடுவாய் வனம்போக
சீக்கிரமாய்நடந்திடுவேன்

8. என்கண்மணியாள்சீதை காக்ஷியாயிப்போது
அன்னையர்கள்மூவர்கட்கும் சிச்சைக்ஷ
அன்புடனே செய்திடுவாய்

18-வது கட்டம்.

நீரும்மே குமிழியான.

1. இந்தமொழிகேட்டுசீதை ஏங்கியப்போது
சிந்தைமகிழ்ந்துமே ராமனோடுரைப்பாள்
2 என்னைவிட்டுவனம்நடக்க ஏர்க்குமோபூமி
மன்னன்ஜெனகன் உமக்கு தாரைவார்த்தாரோ
3. வனம்நடப்பேனென்றுசொல்ல வந்தேதோமனம்
துணைவனே உம்மைப்பிரியேன்சத்தியம்நானும்
4. பொன்னைவிட்டுஒளிமழுங்குமோ இப்பூவுலகினில்
கண்ணைவிட்டுப்பசுப்பிரஞ்ச காக்ஷியாச்சுது
5. நானும்ஜெடைமுடிதரித்து நாதனுடம்மோடு
கூடவேவருவேனென்று கோதையருரைத்தாள்
6. அடியெடுத்துவையும்பாரும் ஸ்ரீ ஹத்திசெய்குவே
முடிதரிப்பேன்நானுமென்றுள மோகனுங்கியும்
7. மத்துமுள்ளபந்துக்களெல்லாம் மனங்கலங்கியே
உத்தமரைக்கண்டுமவள் உருகியேநின்றால்
8. தாஸாதிசேஷனோடு ஜெடைமுடிதரித்து
சீதையரோடுவனம்நடக்க மாதாவைவணங்க

19-வது கட்டம்.

அண்டவர்முனிவர்.

1. முப்பத்திமுக்கோடிதேவர் முனிவரெல்லாரும்
திப்ரமைகொண்டுஸ்ரீ ராமனை சேவித்துநின்றார்
2. எங்கள்குறைவிட்டோமென்று ஏகாச்தமாக
பங்கமலர்தூவிநின்றார் பூவுலகிலுள்ளோர்
3. மங்கைசுமத்திரை அரம்மனை தனில்சென்று
அவள்பங்கயத்தாள் மலர்பணிந்தாற்பத்தினியே
4. என் அன்புடையகண்கணியே அபிராமச்சந்திரா
ஆண்டிருப்பீர் ராஜ்ஜியமென்று ஆசீர்வதித்தார்
5. என் அன்னையரேபரதராஜன் ஆண்டிடவே ராஜ்யம்
அனுப்பிவைத்த அன்னையென்னை ஆரண்யம்தனில்

6. போய்வாரேனம்மாசீதையுடன் பதினாலாண்டு
போக்கியபின்வருவேனம்மா அநுப்புமென்று
7. தம்பிபரதன்லக்ஷ்மணன் சத்துருக்கனோடு
அன்புடனேராசன்தன்னோட ஆதரிப்பீரே
8. என்கண்மணியேராமா இந்தகடுமைவார்த்தையை
என்னமாயுரைத்தீரென்று ஏங்கியேநின்றாள்
9. ஆருரைத்தாருமை வனம்போகவென்று
இந்தபாருதான்சகித்திருக்குமோபாலாநீபோனால்
10. தம்பிலக்ஷ்மணாநீதான் தாஸரதியுடன்
அன்புடனேசெல்வீரென்று அன்னையருரைத்தார்
11. தாய்தந்தைகுருதெய்வமும் சகலமும்அவரே
வாய்மொழிதவறாமலே வனம்நடப்பீரே
12. உத்தமரோடுமொழிதவறாமல் சித்தம்பயமாய்
புத்திமதிதானுரைத்தாள் பொற்கொடியாளும்
13. ஆண்டுபதினாலுஞ்சென்று அரசாள்வாயென்று
அனுக்கிரகத்துசுமித்திரையாள் ஆசீர்வதித்தாள்
14. மங்கைசுபத்திரை மலர்பாதத்தைப்பணிந்து
சங்கபாணிகோசலைதன் அரமனைவந்தார்
15. மஞ்சத்தின்மேல்வீற்றிருக்கும்கோசலையோடு
சஞ்சமலர்ப்பாதம்பணிந்தார் கார்வண்ணனப்போ

20-வது கட்டம்.

ஆதிநாராயணாவென்று.

1. அன்னைகௌசலையாள்மனமகிழ்ந்து
ஆசீர்வாதங்கள்செய்து சித்தம்குளிர்ந்து
2. வாழ்வீர்வளர்வீர் வர்த்தித்திடுவீர்
ஊழியகாலமட்டும் உகந்திருப்பீர்
3. மகுடம்தரிக்குதைககிக்காலமோ இப்போ
மன்னர்முனிவரெங்கே கண்மணியிப்போ
4. அன்னையருரைக்கவுமே ஸ்ரீராமரப்போ
ஆரண்யம்போகவென்று அய்யரனுப்ப
5. தம்பிபரதன் அரசாளவேயென்று
தானனுப்பிவைத்தாரெங்கள் அன்னையென்றார்

6. இந்தமொழியரிந்து கம்ஸலையாளும்
இடிமொழக்கமரிந்து அரவம்போலும்

7. கண்டுதிடுக்கிட்டு மூர்ச்சைதெளிந்து
கண்ணனைப்பார்த்து ஒருவசனம்சொல்வள்

8. மெத்தவயசுசென்ற ராசனைவிட்டு
என்புத்திரனை வனம்போகக்கூடுமோ

9. பாலவயசுசென்ற சானகியாளை
பாரவனம்அழைத்துப்போகலொண்ணுதே

10. ஆதியில்அன்னையர்க்கு வரந்தந்ததால்
அனுப்பினார்யென்னை வனம்போகவென்று

11. ஆனதால்வனம்போய் வாரேனம்மா
அன்னையேயனுப்பியென்று அடிபணிந்தார்

12. கண்டுதிடுக்கிட்டு மனந்தளர்ந்து
கலக்கியேபூமிதன்னில் மூர்ச்சையடைந்தாள்

13. உன்னைவனந்தனில் போகவிடுத்து
தன்னுயிர்பொருத்தாரோ வேந்தருமிப்போ

14. பிள்ளைகலிதீர்த்தபெருமானே
உன்னைப்பிரிந்துநான் இருப்பேனோ

12-வது கட்டம்.

கோசலையாளகுதம்மா.

1. கண்மணிருகவனே என்னுடபூஷணமே
உன்னைப்பிரிந்தாள்வேனோ உத்தமனேஉலகில்

2. அரவதாயிரவருஷம் அரசாண்டதசதந்கு
பிரியமனதாச்சேசு என்புண்ணியாஉம்மைவிட்டு
மாபாவிகைகேசி வரமதைகேட்டதால்
ஆமென்றுஉந்தனை அனுப்பினாரோஉன்னை

3. கலியுகம்மேலிட்டதோ கபடத்தார்வந்ததுவோ
என்மனம்குலையுதே நானவதுவகையில்லாததால்
பேதையானஎந்தனை தோதகம்செய்துமே
போகவும்நீதியுண்டோ
புத்திரகாமேஷ்டியாகப் பலனிதுவோகண்டாய்

4. மலரணைபள்ளிகொண்டால் மதிமுகம்நோகுதென்பாய்
அதிசுடர்கானகத்தை அதிவிரைவாகச்சென்றால்
மெல்லியமேனியெங்கும் முள்ளும்கல்லுமதைக்க
எனமுகில்வர்ணபார்ப்பேனோ கெதியென்னசேர்ப்பீரோ
மூனுதையென்யேழைநெஞ்சம் கண்

5 அஞ்சவேண்டாந்தாயே ஆரண்டம்தன்னையேநான்
கொஞ்சகாலமட்டும்சென்றுநான் கோலமாய்வருவேனே
பஞ்சபிராணனை உன்பர்த்தாஎந்தந்தைதன்னை
அஞ்சாமல்காருமம்மா அதிவிரைவாகவாரேன்
அனுப்புமம்மாதாயே என்றடிபணிந்தார்மாயன் கண்

6. கண்டுகம்ஸலையும் கொண்டுமேசோகந்தன்னில்
கொண்டாலவிழிகளிரண்டேஅ நின்றுசெரிந்திடவே
மாதவனைப்பிரிய நீதியுண்டோயெனக்கு
பேதைகம்ஸலை புலம்பவனம்நடந்தாரே கண்

22-வது கட்டம்.

புவனம்புகழ்ந்திடும்.

1. ராமச்சந்திரன் தாய்மாரைப்போற்றி
தாமக்குழல்சிதையரும் தம்பியுடன்கூடவே

2. அந்தமுள்ளதோர்ரதம் மந்திரிசுமித்திரரும்
வந்துமேவனங்காதம் யேரஅந்ததம்பியோடு

3. தனுஸுபாணமும் சங்குச்சக்கரமும்
மகானுபாவர் கோதண்டத்தை வரிசையுடன்ஏந்தியே

4. ரத்னதேர்தன்னில் பத்னியோடுயோ
பட்டணத்துஜனங்களெல்லாம பரதவிப்பதுடன்கூட

5. மாதாசிதையர் வனம்நடந்திட
அடிநீதமடிபாதகிகை கேசிக்கென்னசெய்தாளோ

6. வஞ்சகனுன வசிஷ்டனைப்போ
கஞ்சமலர்கண்ணனைவனம் போகக்காப்புகட்டினார்

7. அடிஇந்நகரத்தில் நமக்கிருக்க நீதியோ
செந்தாமரைக்கண்ணனோடுசெல்லுவோம்வனந்தன்னில்

8. பூமடமாது போகியபின்னே
மூதேவிவசிப்பவளிப்பாளோடி இந்தப்பாதகிபட்டணத்தில்

9. தாமரையிலைத்தண்ணீர் போலவும்
ஜெகதாமனைப்பிரிந்துஜனங்களையெல்லாம் தவிர்த்திடவே

10. அய்யோசெங்கோல்செலுத்திடும் சிங்காரங்காமல்
நாம்பள் மங்கையரோடு மரைதரித்துவனத்தில்
நடத்திடக்கண்டோம்

11. மணித்தேரேரியே கனவேகமாகி
ஜெனகன் மகளோடுசேஷன் தம்முடனேசெல்லவே

12. பட்டணமுள்ள ஜனங்கள் நித்திரைசெய்யும்போது
உத்தமர்ரதம்நடத்தி உகந்துகங்கைவருகவே

13. கண்டான்குகராஜன்கொண்டான்பரவசம்
கொண்டல்வர்ணரோடுபாதம் நின்றும்மேமணிந்திட

23-வதுகட்டம்.

சோதையரும் பாலகரே.

1. மாதவரைத்தான்பணிந்து வாருப்படகேருமின்னே
ஆதரவாய்சீதையுடன் ஆதிசேஷன்தம்முடனே

2. கெங்காநதியைத்தாண்டி மந்திரிசுதந்திரரோடு
தங்கமணித்தேர்மீதில் தாசரதிதம்பியோடு

3. பாதத்தைத்தான்பணிந்துபோகுதே தகத்துடன்குகன்
மாதவனைமைதிலியோடுவாஸஞ்செய்திடும்யிவ்விடத்தில்

4. காய்கிழங்குகனிகள் தேன்ரகுகளுண்டு
தோய்ந்தகாமதேனு நெய்பாலதயிர் அமுதுண்டு

5. அற்புதமுள்ளதொரு புஷ்பமலருண்டு
இப்போவரவழைப்பேன் என்னுடன்யமதாவுக்கு

6. இங்கேஎழுந்தருளி யென்கங்கைதனிலக்கும்
பங்கஜநாதாவென்று பாதம்பணிந்திடவே

7. என்னுடையசகோதிரனை இன்னம்பதினாலாண்டுசென்று
உன்னுடன்கூட உகந்திடக்காலங்காண

8. மந்திரிசுமிந்திரரோடு அங்கமாய்ரதமேறி
வந்தார்சித்ரகூடம் மகமுனிவர்போற்றிடவே

24-வது கட்டம்.

மைந்தன் வரக்காணேன்.

1. கண்மணியே இந்தச்சித்திரகூடமலை
காக்ஷியைப்பாராயோ

அநுபல்லவி.

2. உன்னித அயோதிக்கிலேமான
சொர்னபீடம்போல்மின்னும் ரத்னமலையை (கண்)

3. மலைநாகங்கள்சுருண்டுபடியதுபோலவே
மகமுனிரிஷிகளுக்கு யேரிடக்கிடப்பதும்
துலங்கும்யாகங்களுக்கு சாமக்கிரியந்தன்னை
துதிக்கையால்யானைகள் கொடுப்பதுவும் (கண்)

4. கும்பங்கள்சுத்திட சிலந்திநூல்கொண்டுபோய்
குரங்குகள்கொடுப்பதுவும்
அன்புடன்தினைக்கதிர் கோதிக்கிளிகளெல்லாம்
ஆவலாய்க்கொப்பதுவும் பைந்தன் (கண்)

5. தாசரதிசிதா மடிதன்னில் சயனித்து
யோகநித்திரைசெய்ய
காக்காஸுரன் மதாஸ்தனம்தன்னைக்கொத்திட
ஏகநேத்திரமானானப்போ (கண்)

6. மாதவரைப்பிரிந்தும் வந்திரிசுமந்திரனும்
பொருகிலேசத்துடனே அயோத்திநகர்செல்ல
சோகமதாய்ப்புலம்பும் தசரதராஜனுக்கு
சேதிதன்னையுரைத்தார் மந்திரி (கண்)

25-வது கட்டம்.

1. பூபதியே ஸ்வாமிவனம்நடந்தார்
சித்ரம்கூடம்தன்னில் தையலுடன்
2 உம்பிட திருவடிக்கி அவர்சரணம்சொன்னார்
சேதியிதுதானென்று அடிபணிந்தார்
3. என்னய்யனேஸ்ரீராமா உம்மைவிட்டு
இந்த அவனிதன்னில் வசிக்கத்தரமோதான்

4. கானகத்துள் ரிஷிசாபத்தாலே
ஆனேனையா இந்தநிலையாலே

5. வானவர்கள்யென்னைத் தூரிடச்சேரா இந்தக்
காலனைப்போன்ற பெஞ்சாதியாலே

6. ராகவாநீரேகெதியென்று ராஜன்
நாடினார் பரமபதத்தைச்சேர்ந்தார்

7. அன்னைகம்சலையோட் வதிஷ்டரப்போ
அழைக்கப்பரதனுக்கு தூதனுப்ப

8. பரதராஜர்தூர் சொர்ப்பனத்தைக்கண்டு
வரிசைதம்பியுடன் ஏதுரைப்பர்

9. தூதுவர்கள்வந்து பரதனண்டை
பாதம்பணிந்துமே வாருமென்றார்

10. தம்பியோடுரதம்தன்னில் யேறி
வந்தாரே அயோத்தியாபுரியைநாடி

11. பட்டணம்உரக்கமாயிருக்க பார்த்துப்ரதனோடே
மாதாமனையில்வந்தார

12. அன்னையரடிபணிந்துநின்றார்
ஆதரவாய்தழுவி முத்தமிட்டாள்

26-வது கட்டம்.

ஆதிஜெகன்னுதா.

1. அய்யனேவாடா இந்த அவனியில்ஜோடாயிந்தவையகத்தை
அடாகுழந்தாய் வந்தாய்பாவித்தைகற்று [யாளுகைக்கி

2. அம்மணிகேளும் அய்யரெங்கேசொல்லும் உடமைப்பிரிந
எங்களய்யா எரக்கமாய்ததோணுதம்மா [திடாரே

3. செல்வமெகேளும் இந்தசிமையை ஆளவள்ளல் ராமனைவனம
போகவேவரங்கினேன் இருவரத்தை

4. இடிவிழுந்தஅரவம் எங்கிக்கிடப்பதுபோல்பாவியடிதனில்கா
மூர்ச்சைகொண்டிதுஅதிசோகதத்தாடுஏதுரைப்பார் [ய்ந்து

5. பட்டாபிராமர்யிந்தபாருக்கெல்லாம்சோமான் துஷ்டியேதூர
போகக்கொடுத்தேனன் துணிப்பேன் இவ்வாணிந்தேல [வனம்

6. என்மாதாசீதைபானவள் வனத்தில்நடந்தபின்பு
மூதேவி உங்களோடே
முகத்தில்விழிப்பதில்லை யென்றெழுந்தார்

7. பாதகிகூனியாலேபகைவந்ததேநியென்றுமாதாகம்சயாள்
முன்னிலையில் மனஸ்தாபங்கொண்டிருந்தார்

27-வது கட்டம்.

ஏமிசேதுநம்மா கிருணு

1. ஆளும்பிள்ளாய்பரதா உமக்களுகையேதையா
சூழுயிர்த்ராஜியத்தை துரைத்தனம் செய்வீர்

2. அன்னைவரம்வாங்கியதால் அபிராமச்சந்திரன்
கண்மணியாள்சீதையுடன் கானகம்நடந்தார்

3. மனஸ்தாபங்கொள்வதென்ன மைந்தனே பரதா
ஜெகபதிபோல் முடிதரித்து சீமையாளுவீர்

4. மாதாகம்சலையுரைத்த வசனத்தைக்கேட்டு
மனக்கவலையோடுபரதன் மறுமொழியுரைப்பார்

28-வது கட்டம்.

போய்வாரேனடி சகிகளா,

1. என் அன்னையேராமன்வனம்போனதறிந்தேனேயானால்
உன்னுடையசன்னதியில் நான்உகந்து நான்வரக்காரணமேன்

2. பக்தியில்லா குருவைப்பழித்ததோஷத்தைநானடைவேன்
மெத்தமாதாபிதாக்களை பூசிக்காததோஷமடைவேன்

3. மூத்தமனையாளிருக்க மோகத்தினால் மிகவேகூடி
கீர்த்தியநளினையாளோடு கேளிதோஷத்தைநானடைவேன்

4. மன்றோரய்வழக்குசொல்லும் பாதகத்தைநானடைவேன்
என் அண்ணன்பரதசாக்ஷியாக அரியேன்இதுசத்தியமே

5. உண்மையாக நானுரைத்தேன் உம்பர்முதல்சாக்ஷியாய்
அன்னைபூமாதேவியேடு ஆகாசவாணிசாக்ஷியாய்

6. சத்தியங்கள்செய்துமந்த உத்தமபரதாழ்வார்
பெத்ததந்தையிருக்கும் போனயிடத்தில்சென்றார்

29-வது கட்டம்.

ஆதியில்பால்கடலில்.

1. தந்தைதசரதற்குசகலகிர்தயங்கள்பண்ணிமுகுந்தவரைக்காண
ஜனங்களோடு வந்தாரேந்திக்கரையில் (வென்று
2. கண்டான் குகராஜன் கொண்டான்மகாரோஷம்
சென்றுன்பரனண்டை உரைகேட்டுசேர்த்தான் அக்கரைதனில்
3. சேனைகள் சென்றிடவே சென்றாள்பரந்திடவே
தானேரிப்பாரந்த சேனைதன்னை தா ஸரதயோடுரைப்பார்
4. உத்தாரம்தாரும் ஒருகொடிக்குள்பாரும்
சத்துருபரதனுடைசேனைகளை சென்றுள்பரக்கடிப்பேன்
5. அப்பனேகேளு உனக்கொப்புலகில்ஆறு
தப்பிதம்செய்தறியான்பரதன் தணிப்பாய்உன்கோபந்தன்னை
6. சேனையுடன் பரதன் சென்றுமேருமனோடே
பாதம்பணிந்து நின்று கண்ணீர்சொரியபார்த்தார்ராமச்சந்திரன்

30-வது கட்டம்.

சந்திரனெங்கையோ.

1. நின்றபரதனைக்கண்டு ஸ்ரீராமனும்தந்தைதாய்சுகமோ
அதிசோகமாய்பராமுகமாய்கொண்டுமனஸ்தாபம்விண்டு
கண்ணீர்மிகநின்றதோர் காரணம்எந்தனோடுரைப்பீர்ஐயனே
2. வையகமளார்ந்ததோர்மாதவனே நம்பிடஐயர்
சொர்க்கமடைந்தார் இகமரந்தார்ஜென்மம்துரந்தார்
இனிசெய்வதேதறியேன் ஸ்ரீராமச்சந்திரா
செப்பினேன் தப்பிதம் யேதறியேன் எந்தன் மாதவா
3. என்தந்தையேயிவ்வேளை யெந்தனைவிட்டு
தவப்பயமானீரா வானில்சேரமனம்ஆர
எந்தவிதத்துள்துணிந்தோ அன்புள்ள அய்யனேமெய்யனே
என்செய்வேன் அய்யோ தெய்வமே
4. என்னப்பா பரதாநீ அய்யர்தசரதர்
ஆபத்துவேளையிலே அரிகினிலேஉதவியன்போல்
ஒப்பிடலாமோ உன்பாக்கியந்தான்
உன்உத்தமனே நீதான் மெத்ததபும்சைய்தகண்மணியே

5. காரணனே மாமன்மதனை தன்னில்சென்று கானிருந்தேனே
ஒழிபதெய்வமரிய மனைம்பிரியக்காரணம்
தூதருரைத்திட அறிந்துகண்டேன் மனதுயர்கொண்டேன்
பாதகியாலிது சத்தியமே

6. மெத்தவருந்தக்தோட உத்தமரும்தன்பத்தினிசமேதராகி
நதிக்கேகிகெங்கைமுழுகி பெத்ததந்தை
கிருத்தியங்கள்முதலாக உத்தமரும்செய்ய
பிரத்தியக்ஷமாய் வந்துவாங்கினர்

7. கவுசலைகைகேசிசுமித்திரை மூவரும்கிலேசமிகவடைந்து
மனங்குழைந்து கண்ணீர்சொரிந்து
கேசவனைக்கட்டித்தழுவி கௌசலைவாசுதேவர்
இனிதேசத்தை யாண்டிடவாருமே

8. வந்துபட்டணமுடி தரிக்கவென்று வணங்கிநின்றவனே
பரிவோடணைத்தும்பாதம்தன்னை
செந்திருவடியளித்திடபரதன்சிரசுமேல்கொண்டு
பரிவாய்ப்பட்டணமுடி சூட்டினர்

51-வது கட்டம்.

பூலோகரோஜாப்பூவே.

1. சீதைசேஷன்தம்முடனே சித்ரகூடந்தன்னைவிட்டு
அத்தியகஸ்தியரோடு ஆச்ரமம்தன்னில்வந்தார்.

2. எம்பெருமான்தான்பணிய எடுத்தணைத்து அகஸ்தியரப்போ
அம்புவில்லுதனையளித்து ஆதித்தியமந்ரம்உபதேசித்தார்

3. வாங்கியேவிராதனோடே மார்பிளந்துதாஸரதி
ஓங்குபுகழ்அத்ரியுடன் உகந்துபர்னசாலைவந்தார்

4. அத்திரிமுனிபாதந்தன்னை சுவாமிபக்தியாய்பணிந்திடவே
பக்தியாய்அநுசூயையும்மைதலிக்கிபாங்குடன் அலங்கரித்தார்

5. வாடாதமாலைசூட்டி மைதலியும்தம்பியோடு
தேடிசரபங்கரோடு ஆச்ரமம்தன்னில்வந்தார்,

6. போற்றிடவே ஸ்ரீராமரும் புண்யசுரபங்கனப்போ
பெருகீர்த்தியுள்ள ஆயுதமோடுமந்ரத்தைமூர்த்தியுபதேசி

7. தவரிஷியனுப்பிவைக்க தண்டகாருண்யம்வரவே
தாபத்துடன் கண்டுமெந்ததவமுனிகுதிக்கனுற்றுர்

32-வது கட்டம்.

சரணம் சரணமையா.

1. சரணம்சரணமையர — ஓஜெகதாமா
கருணம்எங்களைக்காக்கவேணும் — ஏஅபிராமா

2. தெசமுகனுல்நொந்தோபய்யா — ஓஜெகதாமா
வசமென்றும்மைநம்பிவந்தோம் — ஏஅபிராமா

3. உந்தன்சேவைதன்னைக்கண்டேன் — ஓஜெகதாமா
சிந்தைக்கவலையைவிண்டோம் — ஏஅபிராமா

4. இத்தனைபேர்செய்ததவங்கள் — ஓஜெகதாமா
உத்தமனேநீர் அறிவீர் — ஏஅபிராமா

5. பாவிசூர்ப்பனகியால்நாங்கள் — ஓஜெகதாமா
ஆவிமிகத்தளர்ந்தோமையா — ஏஅபிராமா

6. தாவிவரும்வேளையாச்சே — ஓஜெகதாமா
தர்க்காத்திடவேணுமையா — ஏஅபிராமா

7. ஓமயாகங்கள்மறந்தோம் — ஓஜெகநாதா
நேமவிரதங்கள்துறந்தோம் — ஏஅபிராமா

8. பரமரமாய்ஆகிவிட்டோம் — ஓஜெகதாமா
இந்தப்பாவிகுலம்வேரறுப்பீர் — ஏஅபிராமா

9. சீதையுடன் ஆசிரமத்தில் — ஓஜெகதாமா
ஆதரவாய்வீற்றிருந்தார் — ஏஅபிராமா

10. வீற்றிருக்கும்வேளையிலே — ஓஜெகதாமா
சூர்ப்பனகிஅருகில்வந்தாள் — ஏஅபிராமா

33-வது கட்டம்.

1. புண்டரீகக்கண்ணனோடு பூர்ணவடிவுதன்னை
கண்டாளேசூர்ப்பநகி கண்கள்களித்திடவே

2. இவன்மன்மதனோசந்திரனோமானிடவடிவாவந்த
என்மனதுருக்கவந்த எவ்வள்ளலோநானறியேன்

3. கையில்வில்பிடித்து காகுஷ்தியெனக்குக்கொடுத்து
இந்தவையம்தன்னிலெழுந்தருளும்மாதவனோநானறியேன்

4. பச்சநிறமேனியனும் பவழந்தனைப்போன்றஉதடும்
இச்செகத்தில்வந்ததொரு கவ்வனனோநானறியேன்

5. பக்கம்இளஞ்சிங்கத்தைப்போல் பாவனையாம்தம்பியுடன்
சக்கரம்கையில்பிடித்த சாரங்கனோநானறியேன்

6. மங்கையம்மன்பார்வதியோ மகாலட்சுமியோநானறியேன்
தங்கமடல்மேனியனோடு தெரிசனங்கண்டேன்நானே

7. இந்தமங்கைதனைவிட்டென்னை மணம்செய்வரோதான்
சிந்தைமிகவருந்துதையோ செல்வஅண்ணோஎன்செய்வேன்

8. ஓடிஒதுங்கிநின்று நாடியேஸ்ரீராமனண்டை
குடிகேடியானசூர்ப்பனகி புன்சிரிப்புக்கொண்டிருந்தாள்

9. மெத்தவும்வடிவுடனே தேவபத்தினிபோல்ரூபங்கொண்டு
உத்தமனார்பக்கந்தன்னில் உகந்துமவள்நிற்கலுற்றாள்

10. கண்டுமேஸ்ரீராமச்சந்திரர் காராக்கிரூபந்தன்னை
அண்டைநின்றலட்சுமணனோடு ஆச்சரியமாகசெப்பலுற்றார்

34-வது கட்டம்.

வெண்ணையளந்த.

1. எங்கிருந்ததேசம்விட்டு ஆரண்யம்தன்னில்வந்தாய்
சங்கையாயெனக்குசொல்வாய் சாமளனேநீமகிழ்ந்து

2. சங்கையாயுரையுமென்று தையலரேகேட்கவந்தாய்
மங்கையரேஉன்னூரும்பேரும் மர்மமாஉரையுமம்மா

3. அப்படியேஉரைப்பேன்நானும் என்றாசையுள்ளநாயகனே
ஒப்பற்றலங்காபுரியாளும் உடப்பிரந்தவளையா

4. தேவர்களுக்குப்பணிகள்செய்வேன்பாவர்க்குத்துணைவருவேன்
என்னாலாரஊரும்பேரும் அன்புடனேஉரையுமெல்லாள்

5. அடிதையலரேவரங்கள்பெத்த தவந்திலுயர்ந்தாங்கள்தன்
அயோத்திதசரதற்கு அருமையுள்ளபாலன்நாங்கள்

6. ராமன்பரதன்லட்சுமணன் சத்துருக்கன்தம்பியரும்
தாமக்குழல்சீதையரோடுதாய் மொழியால்வந்தோமம்மா

7. மாதவருரைக்கலுமே மையல்கொண்டுசூர்ப்பனகி
காதலாரமென்னைமாலைகாக்ஷியுடன்சூட்டிடுவீர்

8. மாலையிடுமென்றுரைத்தாய் வனத்தவசியானமென்னை
சீதையர்யிருக்கவேறே தேசியரேதுக்குச்சொல்வாய்

9. மெத்தவருத்தங்கொண்டு பத்தினியில்லாமல்தம்பி
உத்தமனிருக்கிறான் போவாய் உகந்திருந்துவாழலாமே

10. ஆதிசேஷன் அண்டைநின்று ஆவலுடன்பார்க்கலுமே
பேதையிவிடமிற்காதடி போடியென்னண்டை

11. போடிபோடிஎன்கலுமே பொல்லாக்கோபமாகியவள்
நாடியந்தசீதையண்டை நான்விடுவேனோவென்றுரைத்தாள்

12. தையலாபயங்கொண்டிட தாசரதிதம்பிதன்னை
அய்யமரசிக்ஷைசெய்வாய் என்றுக்யாபித்தார்மாதவரும்

13. சீக்கிரமாய்சேஷனப்போ செவியோடுமூக்குமுலை
தாக்கியேயறுத்துவிட்டார் தயங்கிக்கரனண்டைசென்றாள்

14. சூர்ப்பனகைசொல்லலுமே துஷ்டன்கரதூஷணனும்
சீக்கிரமாய்சேனையுடன் ஸ்ரீராமனெதிரில்வந்தான்

15. அத்தனைபேர்மாண்டபின்பு அரக்கியென்னும்சூர்ப்பனகி
மெத்தவும்துயரத்தோடு வேகதமேறுடிலங்கைசென்றாள்

34-வது கட்டம்.

ஜுண்டிருப்பாஸிராஜ்.

1. சூர்ப்பனகிஓடிவந்து தென்னிலங்கையில்
மூர்க்கனோடிகால்விழுந்து முறையிட்டுச்சொல்வள்

2. என்கண்மணியாம்தங்கையே நீகலங்குவதேது
உன்னையவமானஞ்செய்தார் உலகத்திலேது

3. மூக்குமுலைசெவியறுத்த மூடத்தையுரைப்பாய்
சீக்கிரத்திலவம்பஞ்சைப்போல்விழவடிப்பேன்

4. அண்ணா அந்த அதிசயத்தை யென்னசொல்வேன்
ஒருவண்ணமடமங்கையுடன் வனமிருக்கிறான்

5. அம்புவில்லுகையில்தரித்து அதிரூபத்துடனே
வம்புசெய்ததுஷ்டருக்கு மாலையாய்வாறான்

6. பார்வதியோலக்ஷுமியோ பரமனார்மகளோ
ஏர்கையுடன்வீற்றிருக்கான் நானென்னசொல்லுவேன்

7. மாணிக்கஜோதிவிளக்கோ மதனரதியோ
ஆணிமுத்துகோர்த்ததொரு அமர்ந்ததெந்தமும்

8. அன்னநடையும்சொர்ணப்பணியும் அலங்காரவிச்சும்
இந்தமண்ணுலகில்கண்டதில்லை அம்மங்கையைப்போல

9. அண்ணாவுனக்காகுமென்று ஆவலாய்சென்றேன்
பின்னப்படசெய்துவிட்டான் புஜபலத்தாலே

10. தங்கையருரைக்கநுமே தாபம்மேற்கொண்டு
மங்கையேஅப்பாலிருக்கும் வனத்தைதெரிவிப்பாய்

11. துஷ்டமந்திரிதன்னை நோக்கி தெசமுகனப்போ
சப்தசாகரம்அப்பாலிருக்கும் சண்டாளனிடம்செல்ல

12. அர்த்தராத்திரியந்த அரக்கனுமகிழ்ந்து
மெத்ததவம்செய்யவும் மாரீசன்பாதம்பணிந்தான்

36-வது கட்டம்.

பாரளந்தார் திருவடி.

1. எங்கிருந்து இங்கில்வந்தாய் யெந்தன்கண்மணியே
வெகுசங்கடம் அடைந்திருக்கிறேன் தாஸரதியாலே

2. எந்தந்ததேசம்ஜெயித்தாய் யெந்தன்மருமகனே
நீவந்ததொருகாரணத்தை வகையுடனேசொல்வாய்

3. மெத்தஅதிரூபத்தோடே உத்தமிஜானகியாம்பெண்
தன்பர்த்தாவோடுவந்திருக்காள் பஞ்சவடிக்கப்பால்

4. ஆசைகொண்டேன்அவள்மீதில் என்அன்புடையமாமா
நேசமுடன்சேர்த்துவைப்பாய் இன்னிமிஷத்தினில்

5. உன்னையல்லால்வேறேயுண்டோ உத்தமனேசொல்வாய்
அக்கன்னிகையையெடுத்துவரக்கருணைசெய்துசெல்வாய்

6. இவ்வசனம்கேட்டவுடனே இடியரவம்போல
கண்ணிருண்டு மூர்ச்சையாகி கணந்தெளிந்துசொல்வான்

7. ஸ்ரீராமனென்றுரைத்தால் செத்திடுவேன்நானே
போரும்போரும் யிவ்வசனப்போல்விடுங்கோமானை

8. தென்னிலங்கை யிழுக்குறைதக்கி காலமும்வந்ததோ
திரும்பிவிடுதெசமுகனை சிக்கிம்நில்லாதே

9. மாரிசனுரைக்கலுமே வாளரக்கன்பொங்கி
கூறிடுவேன் வாளுக்கிரை கொடுத்திடுவேனென்றான்

10. கேட்டுடனேமாரீசன் கிலேசங்கொண்டுமெத்த
வாட்டமில்லா பொன்மானாய் வடிவெடுத்தான் பாவி

